செ.வெ.எண்: 289 நாள்: 5.4.2020

**புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆய்வு.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (5.4.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

இந்த ஆய்வின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசு உத்தரவின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கிருமிநாசினி தெளித்தல், சமூக இடைவெளியை கடைபிடித்தல், விழிப்புணர்வு துண்டுபிரசுரங்கள் வழங்குதல், நிவாரண உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் விராலிமலையில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் ஊரக பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணிகள், கிருமிநாசினி தெளித்தல் போன்ற பல்வேறு பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதுடன், தூய்மைப் பணியாளர்களுக்கு கையுறை, முகக்கவசம், காலணி போன்ற பல்வேறு பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக விராலிமலை மற்றும் இலுப்பூர் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தனி வார்டுகள் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் வெளிமாநிலத்திலிருந்து தங்கியுள்ள பணியாளர்களுக்கு தேவையான உணவு, இருப்பிடம் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய தேவைகளும் ஏற்கனவே மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் செய்யப்பட்டுள்ளது. இந்த வெளிமாநில தொழிலாளர்களுக்கு அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து இவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதேபோன்று முதியோர் உதவித்தொகை பெறும் பயனாளிகளுக்கும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க பொதுமக்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை அவர்களின் இல்லங்களுக்கே நேரடியாக சென்று வழங்கும் பணியையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், சமூக இடைவெளியை கடைபிடித்து உரிய பாதுகாப்பு உபகரணங்களுடன் பயனாளிகள் அனைவருக்கும் கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் விலையில்லா நிவாரணப் பொருட்கள் சென்று சேர்வதை உறுதி செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தலைவர் பழனியாண்டி, அன்னவாசல் ஒன்றிய குழுத்தலைவர் வி.ராமசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**